ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2082/56 - 2018 අගෝස්තු මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.08.02
*2082/56 ஆம் இலக்கம் – 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III – காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*எனது குறிப்பு இல.: 4/3/1/93.*

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவில், 730 பீ, கடுகுருந்த கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் இல. மு. பி. க. 4688 எனும் வரைபடத்தில் கீழ் காட்டப்பட்டுள்ள காணித் துண்டுகள் :

**1. துண்டு இல. 01**
காணியின் பெயர்: உஸ்லியனகே வத்த, உஸ்லியனகே மக வத்த, மாதன் ககவத்த; விபரம்: பிரவேசிக்கும் பாதையும் வீட்டுத் தோட்டமும்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : அளுத்கமை தர்கா நகரில் "றிவர்சைட்டில்" வசிக்கும் சாதிக் மரிக்கார் ஹஸன் மரிக்கார் மற்றும் வேறு சிலரும்; விஸ்தீரணம்: 0.1850 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 02**
காணியின் பெயர்: உஸ்லியனகே வத்த, உஸ்லியனகே மக வத்த, மாதன் ககவத்த; விபரம்: பிரவேசிக்கும் பாதையும் வீட்டுத் தோட்டமும்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : அளுத்கமை தர்கா நகரில் "றிவர்சைட்டில்" வசிக்கும் சாதிக் மரிக்கார் ஹஸன் மரிக்கார் மற்றும் வேறு சிலரும்; விஸ்தீரணம்: 0.8790 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு களுத்துறை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

புத்திகா ருவனி சமரதுங்க,
பிரதேச செயலாளர் ,
களுத்துறை.

பிரதேச செயலகம்,
களுத்துறை,
2018, யூலை 30.

8 – 596

1A - G 28217 - 20 (2018/08)
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2011/எச்டபிள்யூ/58.

கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மாவட்டத்தில், பதியதலாவ பிரதேச செயலாளர் பிரிவில், பிங்தென்ன பத்து தெற்குசிறு பிரிவில், பதியதலாவ (பிரிவு இல. 140/ஏ) கிராம அலுவலர் பிரிவில், பதியதலாவ கிராமத்தில் அமைந்துள்ள, நிலப்பரப்பின் ஆரம்ப வரைபட இல. 49, பிற்சேர்க்கை இல. 50 மற்றும் 2016.03.08 ஆந் திகதி வரைபடத்தின் துண்டுக்காக என்னிடம் இல. 2002/40 மற்றும் 2017.01.19 ஆந் திகதியில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் விஷேட வர்த்தமானிப் பத்திரிக்கை பிரசுரிக்கப்பட்ட துண்டு இல. 3496 ஆவது துண்டின் அரசு எடுத்த காணியின் விஸ்தீரணம் 0.0030 ஹெக்டயார் என திருத்தம் செய்யப்பட வேண்டும்.

06. **துண்டு இல. 3496**

காணியின் பெயர்: பதியதலாவ; விபரம்: நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி உள்ளது; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: 244 ஆவது காணித் துண்டின் பகுதி, (வேறாக்கப்பட்ட வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) (பதியதலாவில் வசிக்கும் வனிகசேகர முதியன்சேலாகே குணவர்தன தேவையில்லாது பயனடைவோர், பேராதெனியா, சென்கலடி வீதி நிர்மாணிப்பதற்கு அவசியமாக உள்ளது); விஸ்தீரணம்: 0.0030 ஹெக்டயார் சரியானது என இத்தால் தெரிவிக்கின்றது.

ஆர். எம். என். விஜயதுங்க,
பிரதேச செயலாளர்,
பதியதலாவ.

பிரதேச செயலகம்,
அம்பாறை மாவட்டம்,
பதியதலாவ,
2018, யூன் 18.

8 - 620